IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.383/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.35 PM.

பி.வா.சா. 1 சாட்சி இராவுத்தன் த.பெ.கொண்டப்பன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 09.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. கொண்டப்பன் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் கிழமேல் அளவு என்ன என்றால் 39 அடியும், தென்வடல் 18 அடிக்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி அடி அளவுகளில் இவ்வழக்கின் வாதி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கிரையம் வாங்கிய இடம் ஆதியில் கந்தசாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கந்தசாமிகவுண்டருக்கு 2 மக்கள் என்றால் சரிதான்.அவர்கள் பழனிக்குமார், சுப்புராமன் என்றால் சரிதான்.

2. கந்தசாமிகவுண்டர் இறப்புக்கு பிறகு அவரது சொத்தை சுப்புராமன், பழனிக்குமார் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி 2 நபர்கள் சொத்தையும் வாதி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். கந்தசாமிகவுண்டர் என்ன சொத்தை அனுபவம் செய்தாரோ, சுப்புராமன், பழனிக்குமார் என்ன சொத்தை அனுபவம் செய்தாரோ அதே சொத்தைதான் வாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3. வீட்டின் பின்புறம் உள்ள காலி இடத்தில் வாதி மோட்டார் ரூம்

அமைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி காலி இடத்தில் ஸ்டெப்டிக் டேங் அமைத்துள்ளார் என்றால் சரிதான். பின்புறம் உள்ள காலி இடத்தில் குடி நீர் தண்ணீர் குழாய் அமைத்துள்ளார் என்றால் சரிதான். அவரே தென்வடல் 58 அடி நீளத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. மேற்படி மோட்டார் ரூமிற்கு சிமெண்டு தளம் அமைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி காலி இடத்தை நான் வாதியிடம் கிரையத்திற்கு கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

4. நான் காலி இடத்தை வாதியிடம் கிரையத்திற்கு கேட்டு மறுத்ததால் 04.09.2009ம் தேதி வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து 1965 கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தின் தென்வடல் அளவு என்ன என்றால் 18 அடி ஆகும்.

5. தாவா சொத்திற்கு வடக்கே எனது தம்பி ஆறுமுகம் வீடு என்றால் வீதி உள்ளது. மேற்படி வீதிக்கு வடக்கே எனது தம்பி ஆறுமுகம் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு வடக்கே எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டை யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு பூர்வீக சொத்தாகும். மேற்படி சொத்தானது எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டதா என்றால் எனது அப்பாவிற்கும், சித்தப்பாவிற்கும் பாத்தியப்பட்டது.

6. எனது அப்பாவும், சித்தப்பாவும் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் பிரித்துக்கொண்டார்கள். மேற்படி பாகபிரிவினைக்கு ஆவணம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு எனது தந்தை

பெயரிலும் பத்திரம் இல்லாத நிலையில் எனது தந்தை பெயரில் பட்டா உள்ளதா என்றால் பட்டா உள்ளது.

7. எனது அப்பாவின் பெயரில் எத்தனை பட்டா உள்ளது என்றால் ஒரு பட்டா உள்ளது. மேற்படி ஒரு பட்டா எனது தம்பி ஆறுமுகம் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் சேர்த்து ஒரே பட்டா என்றால் 3 வீடுகள் உள்ளது. மேற்படி 3 வீட்டில் யார் வசித்து வருகிறார்கள் என்றால் நான், எனது தம்பி முத்துவேல், ஆறுமுகம் குடியிருந்து வருகிறோம். நான் குடியிருந்து வரும் வீடானது பூர்வீக வீடாகும். எனது பூர்வீக வீட்டின் அளவுகளை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது அப்பா 1965 ல் கிரையம் வாங்குவதற்கு முன்பாக பட்டா எதுவும் இருந்ததா என்றால் தெரியாது.

8. 1965 கிரைய பத்திரத்தை பயன்படுத்திதான் எனது தந்தை பட்டா வாங்கினார் என்றால் சரிதான். எனது வீடும், ஆறுமுகம் வீடும் ஒட்டியுள்ளது என்றால் சரிதான். எனது வீடும், ஆறுமுகம் வீடும் சேர்ந்து தென்வடல் 28 1/2 அடி என்றால் சரியல்ல. எனது பத்திரத்தில் ஆறுமுகத்தின் வீட்டிற்கு தெற்கே வீதி என்று நான்குமாலில் சொல்லியுள்ளதா என்றால் சொல்லவில்லை. எனது பத்திரத்தில் வீதி என்று சொல்லாமல் அந்த வீதியில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் காலி இடத்திற்கு மேற்கே சின்ன சந்து உள்ளது என்றால் அது வீதியாகும். வாதி கிரைய பத்திரத்தில் மேற்படி சின்ன சந்தின் உரிமையும் சேர்த்துதான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது.

9. ஆறுமுகம் மற்றும் நானும் சேர்ந்து எனது வீட்டிற்கு வடக்கே உள்ள தெருவில் ஆக்கிரமிப்பு செய்து தென்வடல் 28 1/2 அடி அளவில் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடக்கே தெரு

உள்ளது என்றால் சரிதான். நான் வடக்கே உள்ள தெருவையும் ஆக்கிரமித்து நான் வாதியின் தாவா இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா இடம் வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் அதில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 499/2009 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு உதவாது என்றால் சரியல்ல. நான் கிரைய பத்திரத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 04.10 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.09 10:45:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.